**சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-8**

**ந.க.எண் 3303/அ6/2022 நாள் 02.08.2022**

**பொருள்** பள்ளிக்கல்வி- சென்னை மாவட்டம்- தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் - பள்ளி மற்றும் பொது இடங்களில் குழந்தைகளின் செயல்கள் மற்றும் குழந்தைகளை கையாலுதல் தொடர்பான பரிந்துரைகள் வழங்கப்பட்டது- செயல்படுத்துதல் - சுற்றறிக்கை அனுப்புதல் - சார்பு.

**பார்வை** 1.அரசுக் கடிதம் எண் 12895/பொது 1(2) / 2022-1 நாள் 05.01.2022.

2.சென்னை-6, தமிழ்நாடு மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதம் எண் 2810/ அ1/ 2022 நாள் 22.07.2022.,

3.சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப் பணித்திட்டம்) கடிதம் ந.க.எண்.45769/எம்/இ1/2022 நாள்.29.07.2022

...............

பார்வை (2) மற்றும் (3) ல் காண் கடிதங்களின் அடிப்படையில் பார்வை (1)ல் காண் அரசுக் கடிதம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

பள்ளி மற்றும் பொது இடங்களில் குழந்தைகளின் செயல்கள் மற்றும் குழந்தைகளை கையாலுதல் தொடர்பான பரிந்துரைகள் குறித்து பெறப்பட்ட அரசுக்கடிதம் தகவலுக்காகவும் தக்க தொடர் நடவடிக்கைகாகவும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**இணைப்பு**- பார்வை (1)ல் காண் அரசு கடிதம்

**ஒம்/-**

**முதன்மைக் கல்வி அலுவலர்**

**சென்னை**

**பெறுநர்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் /வட்டாரக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
2. அனைத்துவகை பள்ளித் தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம்.

**நகல்**

1. சென்னை-03, இணை ஆணையர் (கல்வி) பெருநகர சென்னை மாநகராட்சி , தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

045769

பள்ளிக்கல்வித்துறை,

தலைமைச் செயலகம்,

சென்னை-9.

கடிதம் எண்.12895/பொது1(2)/2022-1, நாள்.05.07.2022

அனுப்புநர்

திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6.(இ)
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை- 6(இ)
மெட்ரிக்குலேசன் இயக்குநர், சென்னை-6(இ)

பள்ளிக் கல்வி ஆணையரகம்
08 JUL 2022
சென்னை-6

ஐயா,

பொருள் : பள்ளிக்கல்வி - தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் பள்ளி மற்றும் பொதுயிடங்களில் குழந்தைகளின் செயல்கள் மற்றும் குழந்தைகளை கையாளும் பரிந்துரைகள் - தொடர்பாக.

பார்வை : தலைவர் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் சென்னை, அவர்களின் கடித எண்.491/தமாகுஉபாஆ/ஆ1/2022, நாள் 13.05.2022.

----------

பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் மாதந்திர கூட்டம் 10.05.2022 அன்று ஆணையத் தலைவர் தலைமையில் நடைபெற்றது எனவும் மேற்படி கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன எனவும் அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்:

a. ஒரு குழந்தை சரியாக படிக்கவில்லையென்றால் முதலில் சரியான கற்றல் குறைபாடு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். கற்றலில் குறைபாடிருக்கும் குழந்தை என அடையாளம் காணப்பட்டால் தலைமையாசிரியர் குழந்தையை District Early intervention Center / சிறப்பு கல்வியாளரிடம்(Special Education) அனுப்பி குழந்தைக்கு உதவி செய்யலாம். கற்றலின் குறைபாடில்லாத குழந்தை என்றால் பள்ளி ஆலோசகர் குழந்தையின் படிப்பிற்கு தேவையான முறையான ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

b. ஒரு குழந்தை பள்ளிச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தால் சேதமடைந்த பொருளை குழந்தையின் பெற்றோர்/ பாதுகாவலர் மாற்றி அமைத்துத்தர வேண்டும்.

POCO
SHOT ON POCO F1

c. குழந்தைகள் பெரும்பாலும் செய்யும் தவறுகள் பின்வருமாறு

- பொது போக்குவாத்தில் தொங்கிக் கொண்டு பயணம் செய்தல்.
- பொது இடங்களில் இடையூறு ஏற்படுத்துதல்
- ஆசிரியர்களை அவமதித்தல்.
- மற்ற குழந்தைகளை அடித்தல் / பகடிவதை ராக்கிங்) செய்தல். புகைப்பிடித்தல், போதைப் பொருள் பயன்படுத்துதல், மது அருந்துதல்.
- ஆசிரியர்களை உடல்ரீதியாக காயப்படுத்துதல் / அச்சுறுத்துதல். பள்ளிக்கு இரு சக்கர வானத்தை ஓட்டி வருவது.
- வகுப்பு நேரங்களில் வீடியோ ரீல்களை உருவாக்குதல்.
- சாதி, மதம், பொருளாதர நிலை ஆகியவற்றின் அடிப்படையில் மற்ற குழந்தைகள், பணியாளர்களை பாகுபாடு / புண்படுத்துதல்.
- உருவகேலி செய்தல்.
- பள்ளி சுவர்களில் தவறான வார்த்தை / படங்களை எழுதுதல்.
- தகாத வார்த்தைகளை பயன்படுத்துதல்.

ஏதேனும் குழந்தை மேற்கூறிய செயல்களில் ஈடுபட்டால் பள்ளி ஆலோசகர் முதலில் தக்க ஆலோசனைகள் வழங்க வேண்டும். மேலும், இதே குழந்தை 2வது மற்றும் 3 வது முறையாக தவறு செய்தால் பின்வருமாறு ஒழுங்குமுறை நுட்பங்களை ஆசிரியர்கள் கையாளலாம்.

- ஐந்து திருக்குறள்களை படித்து பொருளோடு ஆசிரியரிடம் எழுதி காட்ட வேண்டும்.
- இரண்டு நீதிக்கதைகளை பெற்றோர்களிடமிருந்து கற்று வகுப்பறையில் சொல்ல வேண்டும்.
- ஐந்து செய்தி துணுக்குகளை சேகரித்து வகுப்பறையில் ஒரு வாரத்திற்கு படித்து காட்ட வேண்டும்
- வகுப்பு மாணவர்களை ஒழுங்குபடுத்த ஒரு வாரத்திற்கு வகுப்பின் தலைவராக பொறுப்பேற்க வேண்டும்.
- ஐந்து வரலாற்று தலைவர்களைப் பற்றி அறிந்துகொண்டு வகுப்பறையில் எடுத்துரைக்க வேண்டும்.
- சிறந்த ஆளுமைகளின் உண்மைக் கதையை கற்றுக் கொண்டு வகுப்பறையில் மாணவர்களிடம் விளக்க வேண்டும்.
- நல்ல பழக்கவழக்கங்களை பற்றிய வரைபடம் (சாட்) எழுதுதல்.
- பாதுகாப்பு மற்றும் முதலுதவி பற்றிய வரைபடம் (சாட்) எழுதுதல்.
- சிறிய காய், கனி தோட்டம் பள்ளியில் அமைத்தல்
- 1098 பற்றிய விழிப்புணர்வு வரைபடம் (சாட்) எழுதுதல்.

POCO F1

- ஏதேனும் பிடித்த பாடத்தை பற்றிய வரைபடம் (சாட்) எழுதுதல்.
- பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை வைத்து கைவினைப் பொருட்களை செய்தல்.
- குழந்தைக்கு தனது தவறை திருத்திக்கொள்ள ஒரு மணி நேரம் அவகாசம் தந்து ஏன் இந்த தவறை செய்தார் என எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்ட செய்தல்.

மூன்றாவாது எச்சரிக்கையிலும் குழந்தை தனது தவறை உணரவில்லை என்றால், 4 வது நிகழ்வில் அருகில் இருக்கும் காவல் நிலையத்திலிருந்து குழந்தை நேய காவல் அதிகாரி (CWPO) மூலம் குழந்தைக்கு அறிவுரை, ஆலோசனை மற்றும் ஊக்கம் அளிக்க வேண்டும்.

குழந்தை 5வது முறையாக தவறாக நடந்துகொண்டால் சுற்றுச்சூழலின் மாற்றமும், நட்பு வட்டாரமும் குழந்தையை ஒழுங்குபடுத்த உதவும் என்பதால் குழந்தையை அருகில் உள்ள அரசு பள்ளிக்கு மாற்றலாம். (பள்ளி நிர்வாகக் குழு ஒப்புதலோடு)

2. மேற்காணும் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தங்களை கேட்டுக்கொள்ள பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(கையொப்பம்) 05/7/2022

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

**நகல்:**

தலைவர்,
தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்,
எண் 183/1, ஈ.வெ.ரா. பெரியார் சாலை,
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

ந.க.எண். 45769/எம்/டு/2022 நாள். 29.07.22

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

இணை இயக்குநர் [NCS] 29.7.22

பெறுநர்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள். 29/7/22

29/7/22

12895
24/05/2022

G21

# தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

அனுப்புநர்
திருமதி.சரஸ்வதிரங்கசாமி,
தலைவர்,
தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்,
எண்.183/1, ஈ.வே.ரா.பெரியார் சாலை,
பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை—10

பெறுநர்
செயலர்,
பள்ளிக்கல்வித்துறை,
தலைமை செயலகம்,
சென்னை.

19 MAY 2022
Chennai-9
Secretariat

**எண்.491/தமாகுஉபாஆ/ஆ1/2022, நாள்.13.05.2022**

அய்யா/அம்மா,

பொருள் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் – பள்ளி மற்றும் பொதுயிடங்களில் குழந்தைகளின் செயல்கள் மற்றும் குழந்தைகளை கையாளும் பரிந்துரைகள் – சார்ந்து.

******

சென்னை.10, தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் மாதாந்திர கூட்டம் 10.05.2022 அன்று ஆணையத் தலைவர் தலைமையில் நடைபெற்றன. மேற்படி கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

1) "சில குழந்தைகள் படிப்பிலிருந்து திசை திருப்பப்பட்டவர்களாக கருதப்படுகின்றனர். மேலும் சில குழந்தைகள் தவறான நடத்தை / குறும்பு செயல்களில் ஈடுபடுகின்றனர். இது சில நேரங்களில் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருக்கின்றது.

கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு நிறைய குழந்தைகள் அரசு பள்ளியில் சேர்ந்துள்ளதால் பல பள்ளிகளில் மாணவர், ஆசிரியர் விகிதம் அதிகமாக உள்ளது. (ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது). இதனால் மாணவர்களை ஆசிரியர்கள் முழுமையாக கவணிக்க முடியாத சூழ்நிலை உருவாகின்றது. குழந்தைகளிடையே கோபம், வன்முறை மற்றும் கவனம் ஈர்க்கும் முறைகள் அதிகமாக காணமுடிகிறது. பள்ளி / பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் ஆசிரியர்களை அவமரியாதையாக நடத்துதுல் போன்றவற்றை மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டும். இளைஞர் நீதிச்சட்டம் 2015, பிரிவு 82—ன்படி குழந்தைகளுக்கு தண்டனை கொடுப்பது சட்டப்படியான குற்றமாகும். இதை உணர்ந்து தவறு செய்யும் மாணவர்களை கையாள்வதற்கான பரிந்துரைகளை ஆணையம் முன்வைக்கிறது.

SHOT ON POCO F1

1. ஒரு குழந்தை சரியாக படிக்கவில்லையென்றால் முதலில் சரியான கற்றல் குறைபாடு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.(இணைப்புடன்).
கற்றலில் குறைபாடிருக்கும் குழந்தை என அடையாளம் காணப்பட்டால் தலைமையாசிரியர் குழந்தையை District Early Intervention Center / சிறப்பு கல்வியாளரிடம் (Special Education) அனுப்பி குழந்தைக்கு உதவ செய்யலாம்.
கற்றலில் குறைபாடில்லாத குழந்தை என்றால் பள்ளி ஆலோசகர் குழந்தையின் படிப்பிற்கு தேவையான முறையான ஆலோசனைகளை வழங்க வேண்டும்.
2. ஒரு குழந்தை பள்ளிச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தால் சேதமடைந்த பொருளை குழந்தையின் பெற்றோர் / பாதுகாவலர் மாற்றி அமைத்துத்தர வேண்டும்.
3. குழந்தைகள் பெரும்பாலும் செய்யும் தவறுகள் பின்வருமாறு–

- பொது போக்குவரத்தில் தொங்கிக் கொண்டு பயணம் செய்தல்.
- பொது இடங்களில் இடையூரை ஏற்படுத்துதல்.
- ஆசிரியர்களை அவமதித்தல்.
- மற்ற குழந்தைகளை அடித்தல் / பகடிவதை (ராக்கிங்) செய்தல்.
- புகைப்பிடித்தல், போதைப் பொருள் பயன்படுத்துதல், மது அருந்துதல்.
- ஆசிரியர்களை உடல்ரீதியாக காயப்படுத்துதல் / அச்சுறுத்துதல்.
- பள்ளிக்கு இரு சக்கர வானத்தை ஓட்டி வருவது.
- வகுப்பு நேரங்களில் வீடியோ ரீல்களை உருவாக்குதல்.
- சாதி, மதம், பொருளாதர நிலை ஆகியவற்றின் அடிப்படையில் மற்றய குழந்தைகள், பணியாளர்களை பாகுபாடு / புண்படுத்துதல்.
- உருவகேலி செய்தல்.
- பள்ளி சுவர்களில் தவறான வார்த்தை / படங்களை எழுதுதல்.
- தகாத வார்த்தைகளை பயன்படுத்துதல்.

ii) ஏதேனும் குழந்தை மேற்கூறிய செயல்களில் ஈடுபட்டால் பள்ளி ஆலோசகர் முதன் முதலில் தக்க ஆலோசனைகள் வழங்க வேண்டும். மேலும், இதே குழந்தையை 2வது மற்றும் 3 வது முறையாக தவறு செய்தால் பின்வருமாறு ஒழுங்குமுறை நுட்பங்களை ஆசிரியர்கள் கையாளலாம்.

- ஐந்து திருக்குறள்களை படித்து பொருளோடு ஆசிரியரிடம் எழுதி காட்ட வேண்டும்.
- இரண்டு நீதிக்கதைகளை பெற்றோர்களிடமிருந்து கற்று வகுப்பறையில் சொல்ல வேண்டும்.

- ஐந்து செய்தி துணுக்குகளை சேகரித்து வகுப்பறையில் ஒரு வாரத்திற்கு படித்து காட்ட வேண்டும்.
- வகுப்பு மாணவர்களை ஒழுங்குப்படுத்த ஒரு வாரத்திற்கு வகுப்பின் தலைவராக பொறுப்பேற்க வேண்டும்.
- ஐந்து வரலாற்று தலைவர்களைப் பற்றி அறிந்துகொண்டு வகுப்பறையில் எடுத்துரைக்க வேண்டும்.
- சிறந்த ஆளுமைகளின் உண்மைக் கதையை கற்றுக் கொண்டு வகுப்பறையில் மாணவர்களிடம் விளக்க வேண்டும்.
- நல்ல பழக்கவழக்கங்களை பற்றிய வரைபடம் (சாட்) எழுதுதல்.
- பாதுகாப்பு மற்றும் முதலுதவி பற்றிய வரைபடம் (சாட்) எழுதுதல்.
- சிறிய காய், கனி தோட்டம் பள்ளியில் அமைத்தல்.
- 1098 பற்றிய விழிப்புணர்வு வரைபடம் (சாட்) எழுதுதல்.
- ஏதேனும் பிடித்த பாடத்தை பற்றிய வரைபடம் (சாட்) எழுதுதல்.
- பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை வைத்து கைவினைப் பொருட்களை செய்தல்.
- குழந்தைக்கு தனது தவறை திருத்திக்கொள்ள ஒரு மணி நேரம் அவகாசம் தந்து ஏன் இந்த தவறை செய்தார் என எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்ட செய்தல்.

iii) மூன்றவாது எச்சரிக்கையிலும் குழந்தை தனது தவறை உணரவில்லை என்றால், 4 வது நிகழ்வில் அருகில் இருக்கும் காவல் நிலையத்திலிருந்து குழந்தை நேய காவல் அதிகாரி (CWPO) மூலம் குழந்தைக்கு அறிவுரை, ஆலோசனை மற்றும் ஊக்கம் அளிக்க வேண்டும்.

iv) குழந்தை 5வது முறையாக தவறாக நடந்துகொண்டால் சுற்றுச்சூழலின் மாற்றமும், நட்பு வட்டாரமும் குழந்தையை ஒழுங்குபடுத்த உதவும் என்பதால் குழந்தையை அருகில் உள்ள அரசு பள்ளிக்கு மாற்றலாம். (பள்ளி நிர்வாகக் குழு ஒப்புதலோடு) என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது "

எனவே, மேற்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள சென்னை, பள்ளிக்கல்வித்துறை, செயலர் அவர்களை ஆணையம் கேட்டுக்கொள்கிறது.

தலைவர் 13/5/22

POCO
SHOT ON POCO F1